## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக ஒழுங்குவிதியின் 20 ஆம் உறுப்புரை மற்றும் பல்லைக்கழகச் சட்டத்தின் 108(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிராத காரணத்தால், ரூபா 300,729,344 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொழும்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப அதிகாரிகளின் அறிவு மற்றும் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அவர்களின் மேற்பார்வையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குழுவொன்றின் ஊடாக மதிப்பீட்டு செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆண்டிற்குரிய செலவினங்களை திட்டவட்டமாக இனங்காணும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் 04 செலவின வகைகளுக்குரிய அட்டுறு செலவினங்களை திட்டவட்டமான இனங்காணாது ரூபா 55,475,741 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டிராததுடன், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 8,607,875 அதனுள் உள்ளடங்கும். மேலும், 3 செலவின | போக்குவரத்துக் கட்டணம், தேர்வுக் கட்டணம், விரிவுரையாளர் கட்டணம் ஆகியவற்றுக்கு செலவிடப்படும் சரியான தொகையை கணக்கிட முடியாததால், அதற்கான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில், கணக்குகளில் ஒப்பீட்டு மதிப்புகள் மறுபரிசீலனை செய்யப்படவில்லை மற்றும் அத்தகைய உருப்படிகளை சமர்ப்பிக்கும் போது 2022 ஆம் ஆண்டு முதல் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வகைகளுக்குரிய கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 15,343,776 ஆன மிகை ஒதுக்கீடுகள், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த காலப்பகுதிகளுக்குரிய தவறுகளை திருத்தும் போது தவறு இடம்பெற்ற காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள | நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய காலக்கழிவு ரூபா 2,003,147 இனால் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால், ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் மற்றும் மூலதன மானிய செலவினங்கள் அந்த அளவினால் முறையே குறைத்தும் அதிகரித்தும் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதனை பேரேடுகளின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பரிசுகள் மற்றும் வெகுமதிக்ளுக்கான கணக்கீட்டு கொள்கையொன்று நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், 2004 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் பரிசில்கள் மற்றும் வெகுமதிகளாக நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 35,226,257 கூட்டுத்தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் வாசிகசாலை புத்தகங்கள் காலக்கழிவு செய்யப்பட்டிராத காரணத்தால் | இந்த பரிசுகள் மற்றும் வெகுமதிகள் நிறுவனத்தின் நிலையான சொத்துக்களில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பெறுமானத்தேய்வு கணிப்பிடுதல் இடம்பெறுகின்றது. எவ்வாறான போதிலும், இந்த வெகுமதிகள் மற்றும் பரிசில்களுக்காக பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கைகள் 2022 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பரிசுகள் மற்றும் வெகுமதிகள் கணக்கின் மீதி மூலதனத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய 1 முதல் 6 வருடங்கள் வரை பழமையான ரூபா 12,609,410 கூட்டுத்தொகையான கடன் கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்வைக்கப்படடாத மீதிகள் தற்போது பரிசோதிக்கப்பட்டவாறு உள்ளதுடன், அந்த நிலைமையை திருத்தியமைப்பதற்க அல்லது வருமானக் கூற்றிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த தரப்பினருக்கு தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 | வழங்கிய முற்பணங்கள் குறித்த பணி நிறைவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீண்டெழும் செலவினங்களுக்காக 38 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,351,335 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிராததுட்ன, அதனுள் 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 7பா 29,000 ஆன முற்பணங்களும் உள்ளடங்கியிருந்தது. | | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 103,730,876 ஆன மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 98,336,164 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,394,712 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பாடநெறி வருமானம் அதிகரித்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 3,605,803 ஆன PGIM Research & Publication நிதியம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PGIM Research & Publication நிதியத்தில் குறிக்கோளுடைய பணிகள் ஏதும் கடந்த இரு ஆண்டுகளில் செயற்பாடாமையினால் அந் நிதி பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போதும் இந்த பணத்தை செலவிடுவதற்காக ஆராய்ச்சிப் பணிகள் முன்வைக்கப்பட்டவாறு உள்ளன. | குறிக்கோளுடைய பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு திட்டத்துடன் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |